(தி/நி) வரைவு.

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.அ.விஜயன், பி.இ.,<br>உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ),<br>மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,<br>மதுரை மாவட்டம்,<br>மாநகராட்சி அலுவலக வளாகம்,<br>3-ம் தளம், அண்ணா மாளிகை,<br>மதுரை - 625 002.<br>E.mail –ID : dtcpmadurai@ gmail.com<br>www.tn.gov.in/dtcp | பட்டியலில் கண்டுள்ளவாறு |
| ந.க.எண்2418/2020/மதி.2 | நாள்.08.09.2020 |

ஐயா/அம்மையீர்

பொருள் : அனுமதியற்ற தனிமனை வரன்முறைப்படுத்துதல் 2017 - மதுரை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - மதுரை உள்ளூர் திட்டக்குழுமப்பகுதியின் எல்லைக்குட்பட்டு அமைந்துள்ள தனிமனை மற்றும் மதுரை மாவட்ட பகுதியில் அமைந்துள்ள தனிமனையினை - ஏற்கனவே வரன்முறைப்படுத்தப்பட்ட விபரங்களின்படி - வரன்முறைப்படுத்த விபரம் தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை :
1) அரசாணை எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.04.05.2017
2) அரசாணை எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்.13.10.2017.
3) நகர் ஊரைமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறைகள் ந.க.எண்.13193/2017/எல்ஏ2, நாள்.30.10.2017, 07.11.2017, 17.11.2017, 20.12.2017, 07.01.2019, 28.01.2019, 05.02.2019 மற்றும் 28.03.2019.
4) அரசாணை எண்.(நிலை): 55, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3)த்துறை, நாள்.08.05.2018.
5) அரசாணை எண்.(நிலை): 21, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3)த்துறை, நாள்.05.02.2019.
6) அரசாணை எண்.(நிலை): 100, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3)த்துறை, நாள்.01.07.2019.

---------

மதுரை மாவட்டம், மதுரை உள்ளூர் திட்டக்குழுமப்பகுதி (Planning Area) மற்றும் திட்டமில்லாப்பகுதிகளில் (Non Planning Area) அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் தனிமனைகளுக்கு பார்வை (1) மற்றும் (2)-ல் கண்டுள்ள அரசாணைகளின்படி இணையதளம் மூலம் பதிவு செய்தும், பார்வை (3)-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி, ஏற்கனவே In principle Clearance மற்றும் அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவில் ஏதேனும் ஒரு தனிமனை வரன்முறைப்படுத்தப்பட்டிருப்பின் அதன் அடிப்படையில் மனைப்பிரிவிலுள்ள ஏனைய விற்கப்பட்ட மனைகளுக்கு ரூ.500 வீதம் பரிசீலினைக்கட்டணம் ஒவ்வொரு மனைக்கும் பெற்றுக் கொண்டும் மற்றும் இணையதள மூலம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களையும் பரிசீலினை செய்து அம்மனைப்பிரிவில் அமையும் மனைகளை கீழ்க்கண்டவாறு வங்கி கணக்குகளில் மற்றும் அரசு கணக்குத் தலைப்பில் கட்டணங்களை பெற்றுக் கொண்டு உள்ளாட்சி அளவிலேயே பார்வையில் கண்டுள்ள அரசாணைகளின் படியும் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் தனிமனைக்கு வரன்முறை ஆணை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

1) **பரிசீலணைக் கட்டணம்**

i. உள்ளூர் திட்டக் குழுமப்பகுதிக்கு, (Planning Area)

"MEMBER SECRETARY, MADURAI LOCAL PLANNING AUTHORITY" -என்ற பெயரில் வங்கி வரைவோலைகளை மனுதாரர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு

..2..

Scanned with CamScanner

சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகள் வங்கி வரைவோலைகளை இவ்வலுவலகத்திற்கு உடனுக்குடன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ii. உள்ளூர் திட்டக்குழுமப்பகுதி தவிர்த்து, மதுரை மாவட்ட அளவில் அமையும் ஏனைய பகுதிக்கு,

"ASSISTANT DIRECTOR, DISTRICT TOWN AND COUNTRY PLANNING OFFICE, MADURAI"- என்ற பெயரில் வங்கி வரைவோலைகளை மனுதாரர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகள் வங்கி வரைவோலைகளை இவ்வலுவலகத்திற்கு உடனுக்குடன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2) <u>வளர்ச்சிக் கட்டணம்</u>

சம்மந்தப்பட்ட உள்ளாட்சியின், வங்கி கணக்கில் மனுதாரரிடமிருந்து வளர்ச்சி கட்டணம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

3) <u>வரன்முறைக் கட்டணம்</u>

வரன்முறைக் கட்டணம் உரிய அரசாணை மற்றும் அரசு விதிகளின்படி கீழ்கண்ட அரசு கணக்குத் தலைப்பில் சலான் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டும்.

<u>அரசு கணக்குத் தலைப்பு</u>

0217. Urban Development -60 other Urban Developments Scheme -800 others receipts AT Receipts under Regularization charged of unapproved Layout and plots - DTCP 27 Non Taxation Fees -30 Regularization (DPC 0217 60 800 AT 2730)

உள்ளாட்சியில் தனிமனை ஒப்புதல் வழங்கப்பட்ட பின்னர், மாதம் மாதம் கீழ்க்கண்ட அறிக்கை இவ்வலுவலத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| வ. எண் | உள்ளாட்சியின் பெயர் | மனுதாரர் பெயர் மற்றும் முகவரி | மனை அமைந்துள்ள கிராமம் | சர்வே எண். | மனைகளின் பரப்பு | மனை எண்கள் | தொகை விபரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

(ஒ/ப).

உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை மாவட்டம்.

<u>பட்டியல்</u>

1) ஆணையாளர், மதுரை மாநகராட்சி, மதுரை மாவட்டம்.
2) மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், மேலக்கல் மெயின்ரோடு, கோச்சடை, மதுரை -16.
3) ஆணையாளர், மேலூர் நகராட்சி, மதுரை மாவட்டம்.
4) ஆணையாளர், திருமங்கலம் நகராட்சி, மதுரை மாவட்டம்,
5) ஆணையாளர், உசிலம்பட்டி நகராட்சி, மதுரை மாவட்டம்,
6) உதவி இயக்குநர், பேரூராட்சிகள், மதுரை மாவட்டம்
7) செயல் அலுவலர், A.வெள்ளாளப்பட்டி பேரூராட்சி,
8) செயல் அலுவலர், அலங்காநல்லூர் பேரூராட்சி,
9) செயல் அலுவலர், எழுமலை பேரூராட்சி,
10) செயல் அலுவலர், பாலமேடு பேரூராட்சி,

Scanned with CamScanner

11) செயல் அலுவலர், பரவை பேரூராட்சி,
12) செயல் அலுவலர், பேரையூர் பேரூராட்சி,
13) செயல் அலுவலர், சோழவந்தான் பேரூராட்சி,
14) செயல் அலுவலர், தே.கல்லுப்பட்டி பேரூராட்சி,
15) செயல் அலுவலர், வாடிப்பட்டி பேரூராட்சி,
16) உதவி இயக்குநர், ஊராட்சிகள், மதுரை மாவட்டம்
17) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம்,
18) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம்,
19) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம்,
20) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம்,
21) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம்,
22) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம்,
23) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம்,
24) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), மேலூர் ஊராட்சி ஒன்றியம்,
25) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம்,
26) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம்,
27) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம்,
28) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம்,
29) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம்,

Scanned with CamScanner